தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

வைகாசி 14, விசு – திருவள்ளுவர் ஆண்டு 2032

2001 மே 28, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்.”

இடைவிடாது துன்பங்கள் மேன்மேல் தொடர்ந்து வரினும் மனம் கலங்காதவர் அடைந்த துன்பங்களே துன்பப்பட்டுப் போம்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி* (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கல் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. ஏ.கே. காதர் குட்டி மற்றும் திரு. பி. காளியப்பன் ஆகியோர் 14-2-2001 அன்றும், திரு. கி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 20-2-2001 அன்றும், திரு. கி. ஜெயராமன் அவர்கள் 18-3-2001 அன்றும், திருமதி டி.என். அனந்தநாயகி அவர்கள் 4-4-2001 அன்றும், திரு. எஸ்.ஆர். சென்னியப்பன் அவர்கள் 17-4-2001 அன்றும், திரு. இ.எம். நடராஜன் அவர்கள் 28-4-2001 அன்றும், திரு. எஸ்.என். இராமசாமி அவர்கள் 9-5-2001 அன்றும் மறைவுற்றதை பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஏ.கே. காதர் குட்டி அவர்கள் 1937 முதல் 1939 வரை மற்றும் 1946 முதல் 1951 வரை அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநிலத்தின் கோட்டையம் முகமதிய ஊரக தொகுதியிலிருந்து அன்றைய சென்னை மாகாண சபையின் உறுப்பினராக சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. பி. காளியப்பன் அவர்கள் 1977 முதல் 1980 வரை காரைக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு செவ்வனே பணியாற்றி உள்ளார்கள்.

திரு. கி. பாலசுப்பிரமணியன் அவர்கள் 1991 முதல் 1996 வரை பட்டுக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. கி. ஜெயராமன் அவர்கள் 1967 முதல் 1971 வரை மற்றும் 1971 முதல் 1976 வரை சேலம் 1 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தொடர்ந்து இரு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திருமதி டி.என். அனந்தநாயகி அவர்கள் 1957 முதல் 1962 வரை மற்றும் 1962 முதல் 1967 வரை பேசின் பிரிட்ஜ் தொகுதியிலிருந்து இரு முறையும் 1971 முதல் 1976 வரை மைலாப்பூர் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. எஸ்.ஆர். சென்னியப்பன் அவர்கள் 1970 ஆம் ஆண்டில் பெருந்துறை தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 வரை உறுப்பினராக நன்கு பணியாற்றியுள்ளார்கள்.

திரு. இ.எம். நடராஜன் அவர்கள் 1967 முதல் 1971 வரை அந்தியூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பட்டு சிறந்த முறையில் பணியாற்றி உள்ளார்கள்.

திரு. எஸ்.என். இராமசாமி அவர்கள் 1980 முதல் 1984 வரை மற்றும் 1985 முதல் 1988 வரை சாத்தான்குளம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றத்தக்க வகையில் பணியாற்றி உள்ளார்கள்.

அவர்களது மறைவினால், அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு நிமிடம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று ஒரு மணித்துளி அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. சாதிக் அலி, முன்னாள் தமிழக ஆளுநர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *முதலில் திரு. சாதிக் அலி, முன்னாள் தமிழக ஆளுநர் அவர்கள் மறைவு குறித்து. முதுபெரும் காந்தியவாதியும், இந்திய நாட்டின் விடுதலைக்காக பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு பலமுறை சிறை சென்றவரும், எழுத்தாற்றல் மிக்கவரும், மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், மஹாராஷ்டிர மாநிலத்தின் ஆளுநராகவும், 4-11-1980 முதல் 2-9-1982 வரை இம்மாநில ஆளுநராகவும், பணியாற்றிய திரு. சாதிக் அலி அவர்கள் 17-4-2001 அன்று மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை பெரும் அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது. அவரது மறைவினால் அவரைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு இப்பேரவை ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.*

முற்பகல் 10-05

(ஆ) திரு. பா. ராமச்சந்திரன், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் மற்றும் முன்னாள் கேரள மாநில ஆளுநர்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அடுத்து திரு. பா. ராமச்சந்திரன், சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர், முன்னாள் மத்திய மின் துறை அமைச்சர் மற்றும் முன்னாள் கேரள மாநில ஆளுநர் அவர்கள் மறைவு குறித்து.*